1. நட்டம் எப்போது ஏற்படுகிறது?

   அ) அடக்கவிலை = விற்றவிலை ஆ) அடக்கவிலை < விற்றவிலை

   இ) விற்றவிலை < அடக்கவிலை ஈ) விற்றவிலை = குறித்தவிலை

2. ஒரு பொருளின் ஒட்டிய விலையும் (Tag price) அதன் குறித்த விலையும் ஒன்றே. அ) தவறு ஆ) சரி

3. தள்ளுபடி இல்லையெனில் குறித்தவிலை = விற்பனை விலை

   அ) தவறு ஆ) சரி

4. ஒரு பொருளுக்கான தயாரிப்பாளரின் விற்பனை விலையும் விற்பனையாளரின் அடக்க விலையும் சமம். அ) தவறு ஆ) சரி

5. அ.விலை=₹90, வி.விலை=₹65 எனில், லாபம் = ₹25.

   அ) தவறு ஆ) சரி

6. கௌசல்யா ஒரு பொருளை ₹50க்கு வாங்கி மற்றும் அதனை ₹55க்கு விற்கிறாள் எனில், ₹5 ஆனது அவளுக்கு

   அ) இலாபம் ஆ) நட்டம் இ) அடக்கவிலை ஈ) விற்றவிலை

7. தள்ளுபடி எப்போதும் குறித்த விலையுடன் கூட்டப்படும்.

   அ) தவறு ஆ) சரி

8. இலாபம் எப்பொழுது ஏற்படுகிறது?

   அ) அடக்கவிலை = விற்றவிலை ஆ) அடக்கவிலை < விற்றவிலை

   இ) விற்றவிலை < அடக்கவிலை ஈ) விற்றவிலை=குறித்தவிலை

9. அடக்க விலை = விற்றவிலை எனில்,

   அ) நட்டம் ஆ) இலாபம் இ) இலாபமும் இல்லை நட்டமும் இல்லை

   ஈ) லாபமும் உண்டு நட்டமும் உண்டு

10. கீழ்க்கண்டவற்றில் எது சரி?

    அ) லாபம் = அ.வி. + வி.வி. ஆ) தள்ளுபடி = வி.வி – கு.வி.

    இ) நட்டம் = அ.வி. – வி.வி. ஈ) லாபம் = அ.வி. – வி.வி.

ஊ.ஒ.ந.நி.பள்ளி, கோமாளியூர். LIVEWORKSHEETS